2013 மே 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 367, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

367—

இலவச வீடு கட்டுதல்

***7494—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, சுருளோடு ஊராட்சி, மேற்கு வீரப்புலி ஆர்.சி. காலனியில் பழுதடைந்த குடியிருப்புகளில் வசிக்கும் ஆதி திராவிட ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, சுருளோடு ஊராட்சி, மேற்கு வீரப்புலி ஆர்.சி. காலனியில் உள்ள 25 வீடுகள், ஆதி திராவிட வகுப்பினருக்கு, 30 ஆண்டுகளுக்கு முன்னர், ஆர்.சி. சர்ச் நிருவாகத்தால் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இந்த 25 வீடுகள் அமைந்துள்ள சுமார் 1 ஏக்கர் நிலம், ஆர்.சி. சர்ச் நிருவாகத்திற்குச் சொந்தமானதாகும். பசுமை வீடுகள் திட்டம் மற்றும் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் ஆகியவற்றின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும், சொந்தமாகப் பட்டா நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே வீடுகள் கட்டித் தர இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே பெரும்பாலான கிராமங்களிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்திலே, தலித் மக்கள் வாழ்கின்ற பகுதியிலே வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, கொங்கராம்பட்டு பகுதியிலே நரிக்குறவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இதுவரையில் அவர்களுக்கு வீடு கட்டித் தரப்படவில்லை. எனவே, வீடு கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். மேலும், புரட்சித் தலைவர் காலத்திலே கட்டித் தரப்பட்ட வீடுகள் பழுதாகி இருக்கின்றன. அவற்றைப் பழுது நீக்கித் தருவதற்கும் வாய்ப்பு இருக்கின்றதா எனக் கேட்பதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கை வைக்க விரும்புகின்றேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு முருகவேல், இந்தமாதிரி நீங்கள் பேசக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இந்தமாதிரி எல்லாம் நீங்கள் பேசக்கூடாது. நீங்கள் கேள்வியோடு நிறுத்திக்கொள்ளுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு வினாக்களை முன்வைத்திருக்கிறார்கள். ஒன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (குறுக்கீடு) நான் பதில் சொல்வதைக் கேளுங்கள். கேள்வி கேட்டுவிட்டு அங்கே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் பழுதடைந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றை சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பழுதுபார்ப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, நரிக்குறவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்கும் வீடு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 மே 2]

கட்டிக் கொடுக்கப்படவில்லை என்று உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். முன்னுரிமை அடிப்படையிலே, அவர்களுக்கும் வீடு கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் பசுமை வீட்டிற்கு 2 இலட்சத்து 10 ஆயிரமும், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சத்து 20 ஆயிரமும் வழங்கியதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில், 1980 ஆம் ஆண்டு, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், குன்னூர் ஊராட்சி, வீராட்சியில் தொகுப்பு வீடுகள், ஓட்டு வீடுகளாகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய மாவட்டம் கடலோர மாவட்டம் என்பதால், ஒவ்வோராண்டும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மழை, வெள்ளம் மற்றும் புயலால் அந்த வீடுகள் பாதிக்கப்படுகின்றன. அந்த வீடுகளில் குடியிருக்கக்கூடிய பயனாளிகள், பழுது நீக்கம் செய்வதற்கு ஒவ்வோராண்டும் செலவிட வேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த வீடுகளை இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற பசுமை வீடுகளாகக் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று கட்டிக் கொடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடைசியாக வைத்த கோரிக்கைக்குப் பதில் கூறுகிறேன். ஏற்கெனவே, அரசின் சலுகையாக, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள்

கட்டப்பட்டிருக்கிறதென்றால், மீண்டும் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது என்பது இயலாத காரியம். காரணம், நிறைய பேர் இன்னமும் அரசின் சலுகையைப் பெறாமல், பட்டா இடத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கின்ற காரணத்தினால், அது இயலாது.

அடுத்ததாக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001-2006-ல் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபொழுதே, ஓட்டு வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 10,000 ரூபாய் விடுவித்துக் கொடுத்திருக்கிறார்கள். அப்போது இருந்த சட்டமன்ற உறுப்பினரே அதைச் செய்திருக்க வேண்டும். இருந்தாலும்கூட, இப்போது 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதை ஆய்வு செய்து, அரசின் சார்பாக எந்த அளவுக்கு உதவ முடியும் என்று ஆராய்ந்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

முற்பகல் 10-15

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், கருத்துகளின் கலைப் பூங்காவாக, எண்ணங்களின் வண்ணச்சோலையாக, குடும்பப் பாசங்களின் உறைவிடமாக, அன்பும், பண்பும் ஒருங்கேபெற்று, அன்னைத் தமிழகத்தை வழிநடத்தும் வான்புகழ்கொண்ட வரலாற்று அன்னையின் (மேசையைத் தட்டும் ஒலி) பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட கவுண்டம்பாளையம் பகுதியிலே ஆதி திராவிடர்களுக்கென கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளெல்லாம், கிட்டத்தட்ட 250 வீடுகள், இடிந்து விழுகின்ற சூழ்நிலையில் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.25,000/- கொடுத்தாலும்கூட repair செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

2013 மே 2]

அவர்கள் இன்றைக்கு ரூ.1,20,000/- அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தின்கீழ் வீடுகளைக் கொடுத்தால், அவர்களுக்கு இருப்பதற்கு இடமாவது இருக்கும் என்ற அடிப்படையிலே, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர் கேட்ட கேள்விக்கு இதே பதிலை நான் கூறினேன். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, அதே பதிலைச் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறேன். ஏற்கெனவே அரசின் சார்பாக அவர்கள் பலனடைந்திருக்கிறார்கள். பலனடையாத ஏழைகள் இன்னும் நிறைய பேர் இருக்கிறார்கள். அரசினுடைய பலன் அவர்களுக்குச் சென்றடைந்த பின்பு, இது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 368, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

368—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***19129—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், வடகுமரை ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?